# தமிழ்
## எட்டாம் வகுப்பு – வினாக்கள்
(இயல் 4-7)

### கல்வி அழகே அழகு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கற்றவருக்கு அழகு தருவது ..............................
   அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
2. 'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...........................
   அ) கலன் + லல்லால் ஆ) கலம் + அல்லால் இ) கலன் + அல்லால் ஈ) கலன் + னல்லால்

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

3. அழகு –
4. கற்றவர் –
5. அணிகலன் –

**குறுவினா**

6. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

**சிறுவினா**

7. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

### புத்தியைத் தீட்டு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் ........................ இன்றி வாழ்ந்தார் .
   அ) சோம்பல் ஆ) அகம்பாவம் இ) வருத்தம் ஈ) வெகுளி
2. 'கோயிலப்பா ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................
   அ) கோ + அப்பா ஆ) கோயில் + லப்பா இ) கோயில் + அப்பா ஈ) கோ + இல்லப்பா
3. பகைவன் + என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .....................
   அ) பகைவென்றாலும் ஆ) பகைவனென்றாலும் இ) பகைவன்வென்றாலும்
   ஈ) பகைவனின்றாலும்

**குறுவினா**

4. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
5. பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது?

**சிறுவினா**

6. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

### பல்துறைக் கல்வி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ............................
   அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு
2. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் .......................
   அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை
3. இன்றைய கல்வி .......................... நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
   அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் ஈ) தொழிலில்

**நிரப்புக**

4. கலப்பில் .............................. உண்டென்பது இயற்கை நுட்பம்
5. புற உலக ஆராய்ச்சிக்கு .................... கொழுகொம்பு போன்றது.
6. வாழ்விற்குரிய இன்பத் துறைகளில் தலையாயது .......................... இன்பம் ஆகும்.

**பொருத்துக**

7. இயற்கை ஓவியம் – அ) சிந்தாமணி
8. இயற்கை தவம் – ஆ) பெரிய புராணம்
9. இயற்கைப் பரிணாமம் – இ) பத்துப்பாட்டு
10. இயற்கை அன்பு – ஈ) கம்பராமாயணம்

**குறுவினா**

11. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு.வி.க கூறுவன யாவை?
12. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
13. திரு. வி. க., சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

**சிறு வினா**

14. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவனவற்றை எழுதுக.
15. அறிவியல் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?

**நெடுவினா**

16. காப்பியக் கல்வி குறித்துத் திரு. வி. க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**ஆன்ற குடிப்பிறத்தல்**

1. திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

**வேற்றுமை**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது .................... ஆகும்
   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) வேற்றுமை
2. எட்டாம் வேற்றுமை ....................... வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.
   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) விளி ஈ) பயனிலை
3. உடனிகழ்ச்சிப் பொருளில் .............................. வேற்றுமை வரும்.
   அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்
4. 'அறத்தான் வருவதே இன்பம்' – இத்தொடரில் ......................... வேற்றுமை பயின்று வந்துள்ளது.
   அ) இரண்டாம் ஆ) மூன்றாம் இ) ஆறாம் ஈ) ஏழாம்
5. 'மலர் பானையை வனைந்தாள்' – இத்தொடர் ......................... பொருளைக் குறிக்கிறது.
   அ) ஆக்கல் ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்

**பொருத்துக**

6. மூன்றாம் வேற்றுமை – அ) இராமனுக்குத் தம்பி இலக்குவன்
7. நான்காம் வேற்றுமை – ஆ) பாரியினது தேர்
8. ஐந்தாம் வேற்றுமை – இ) மண்ணால் குதிரை செய்தான்
9. ஆறாம் வேற்றுமை – ஈ) ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்

**சிறுவினா**

10. எழுவாய் வேற்றுமையை விளக்குக.
11. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?
12. உடனிகழ்ச்சிப் பொருளில் என்றால் என்ன?

**கீழ்க்காண்பவற்றுள் ஒரு சொல்லை எடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

13. மா –
14. தேன் –
15. மலர் –
16. செம்மை –
17. சிட்டு –
18. கனி –
19. குருவி –
20. இலை –
21. காய் –
22. கூடு –
23. முட்டை –
24. மரம் –

**பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

25. பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்
26. திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது
27. தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது
28. கபிலன் தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா என்று கேட்டான்
29. திரு வி க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ்பெற்றது

**கட்டுரை எழுதுக.**

30. (முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்திலுள்ளவை – படிக்கும் முறை – முடிவுரை)

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**கலைச்சொல் அறிவோம்**

31. நிறுத்தக்குறி – Punctuation
32. அணிகலன் – Ornament
33. திறமை – Talent
34. மொழிபெயர்ப்பு – Translation
35. விழிப்புணர்வு – Awareness
36. சீர்திருத்தம் – Reform

## திருக்கேதாரம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. காட்டிலிருந்து வந்த …………………… கரும்பைத் தின்றன.
   அ) முகில்கள் ஆ) முழவுகள் இ) வேழங்கள் ஈ) வேய்கள்
2. 'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………….
   அ) கனகச் + சுனை ஆ) கனக + சுனை இ) கனகம் + சுனை ஈ) கனம் + சுனை
3. முழவு + அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ……………………
   அ) முழவுதிர ஆ) முழவுதிரை இ) முழவதிர ஈ) முழவு அதிர

**குறுவினா**

4. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?

**சிறு வினா**

5. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?

## பாடறித்து ஒழுகுதல்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பசியால் வாடும் …………………… உணவளித்தல் நமது கடமை.
   அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு
2. நம்மை …………………. ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.
   அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை
3. மறைபொருளைக் காத்தல் ………………. எனப்படும்.
   அ) சிறை ஆ) அறை இ) கறை ஈ) நிறை
4. 'பாடறிந்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………..
   அ) பாட + அறிந்து ஆ) பா + அறிந்து இ) பாடு + அறிந்து ஈ) பாட்டு + அறிந்து
5. முறை + எனப்படுவது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் …………………..
   அ) முறையப்படுவது ஆ) முறையெனப்படுவது இ) முறை எனப்படுவது
   ஈ) முறைப்படுவது

**குறுவினா**

6. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
7. முறை, பொறை என்பவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது?

**சிறுவினா**

8. நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.

## நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை …………………..
   அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள் இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்
2. பானை …………………. ஒரு சிறந்த கலையாகும்.
   அ) செய்தல் ஆ) வனைதல்இ) முடைதல் ஈ) சுடுதல்
3. 'மட்டுமல்ல' எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………
   அ) மட்டு + மல்ல ஆ) மட்டம் + அல்ல இ) மட்டு + அல்ல ஈ) மட்டும் + அல்ல
4. கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ……………………
   அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில் இ) கயிறுக்கட்டில ஈ) கயிற்றுகட்டில்

**பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

5. முழுவதும் _
6. மட்டுமல்லாமல் –
7. அழகுக்காக –
8. முன்பெல்லாம் –

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**குறுவினா**

9. எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம்?
10. மண்பாண்டம், சுடுமண் சிற்பம் – ஒப்பிடுக.
11. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

**சிறுவினா**

12. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.
13. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

**நெடுவினா**

14. தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**தமிழர் இசைக்கருவிகள்**

1. காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ..........................
   அ) வேற்றுமைத் தொகை ஆ) உம்மைத் தொகை இ) உவமைத் தொகை ஈ) அன்மொழித் தொகை
2. 'செம்மரம்' என்னும் சொல் ..................... த்தொகை.
   அ) வினை ஆ) பண்பு இ) அன்மொழி ஈ) உம்மை
3. 'கண்ணா வா!' – என்பது ................... த் தொடர்.
   அ) எழுவாய் ஆ) விளி இ) வினைமுற்று ஈ) வேற்றுமை

**பொருத்துக**

4. பெயரெச்சத் தொடர் – அ) கார்குழலி படித்தாள்.
5. வினையெச்சத் தொடர் – ஆ) புலவரே வருக.
6. வினைமுற்றுத் தொடர் – இ) பாடி முடித்தான்.
7. எழுவாய்த் தொடர் – ஈ) எழுதிய பாடல்.
8. விளித் தொடர் – உ) வென்றான் சோழன்.

**சிறுவினா**

9. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
10. இரவு பகல் என்பது எவ்வகைத் தொடர் என விளக்குக.
11. அன்மொழித்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக.**

(கொண்டு, இருந்து, உடைய, காட்டிலும், ஆக, நின்று, உடன், விட, பொருட்டு)

12. இடி ...................... மழை வந்தது.
13. மலர்விழி தேர்வின் ..................... ஆயத்தமானாள்.
14. அருவி மலையில் ..................... வீழ்ந்தது.
15. தமிழைக் ................... சுவையான மொழியுண்டோ !
16. யாழ், தமிழர் ........................ இசைக் கருவிகளுள் ஒன்று.

**சரியான இணைச்சொற்களை இட்டு நிரப்புக.**

(மேடுபள்ளம், ஈடுஇணை, கல்விகேள்வி, போற்றிப்புகழப்பட, வாழ்வு தாழ்வு, ஆடிஅசைந்து)

17. சான்றோர் எனப்படுபவர் ............................ களில் சிறந்தவர் ஆவார்.
18. ஆற்று வெள்ளம் ...................... பாராமல் ஓடியது.
19. இசைக்கலைஞர்கள் ..................... வேண்டியவர்கள்.
20. தமிழ் இலக்கியங்களின் பெருமைக்கு ........................ இல்லை.
21. திருவிழாவில் யானை ................. வந்தது.

**கடிதம் எழுதுக**

22. இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

www.Padasalai.Net

**கலைச்சொல் அறிவோம்**

23. Crafts
24. Flute
25. Drum .
26. Basketry
27. Knitting
28. Horn
29. Artisan
30. Rite

## திருக்குறள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அரசரை அவரது ...................... காப்பாற்றும்.
அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படை வலிமை
2. சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் ............................ தகுதி அறிந்து பேசவேண்டும்.
அ) சொல்லின் ஆ) அவையின் இ) பொருளின் ஈ) பாடலின்
3. 'கண்ணோடாது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........................
அ) கண் + ஓடாது ஆ) கண் + ணோடாது இ) க + ஓடாது ஈ) கண்ணோ + ஆடாது
4. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................
அ) கச + டற ஆ) கசட + அற இ) கசடு + உற ஈ) கசடு + அற
5. 'என்று + ஆய்ந்து' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ......................
அ) என்றாய்ந்து ஆ) என்று ஆய்ந்து இ) என்றய்ந்து ஈ) என் ஆய்ந்து

**குறுவினா**

6. நன்மையைத் தரும் செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் வழி யாது?
7. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?
8. அரசன் தண்டிக்கும் முறை யாது?
9. சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?

## வளம் பெருகுக

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தோட்டத்தில் தம்பி ஊன்றிய ...................... எல்லாம் முளைத்தன.
அ) சத்துகள் ஆ) பித்துகள் இ) முத்துகள் ஈ) வித்துகள்
2. என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு ...................... பெருகிற்று.
அ) காரி ஆ) ஓரி இ) வாரி ஈ) பாரி
3. 'அக்களத்து' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................
அ) அ + களத்து ஆ) அக் + களத்து இ) அக்க + அளத்து ஈ) அம் + களத்து
4. கதிர் + ஈன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ....................
அ) கதிரென ஆ) கதியீன இ) கதிரீன ஈ) கதிரின்ன

**குறுவினா**

5. பயிர்கள் வாட்டமின்றி கிளைத்து வளரத் தேவையானது யாது?
6. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

**சிறு வினா**

7. உழவுத் தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?

## மழைச்சோறு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் .........................
அ) பெருமழை ஆ) சிறு மழைஇ) எடை மிகுந்த மழை ஈ) எடை குறைந்த மழை
2. 'வாசலெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................
அ) வாசல் + எல்லாம் ஆ) வாசல் + எலாம் இ) வாசம் + எல்லாம் ஈ) வாசு + எல்லாம்
3. 'பெற்றெடுத்தோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................
அ) பெறு + எடுத்தோம் ஆ) பேறு + எடுத்தோம் இ) பெற்ற + எடுத்தோம் ஈ) பெற்று + எடுத்தோம்
4. கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .....................
அ) கால்லிறங்கி ஆ) காலிறங்கி இ) கால் இறங்கி ஈ) கால்றங்கி

**குறுவினா**

5. மழைச்சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு கூறப்படுகிறது?
6. மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?

**சிறுவினா**

7. கோலம் கரையாத நிலையை மழைச்சோறு பாடல் எவ்வாறு விளக்குகிறது?
8. மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.
9. மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது?

## கொங்குநாட்டு வணிகம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் நூல் ..............................
   அ) தொல்காப்பியம் ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்
2. சேரர்களின் தலைநகரம் .......................
   அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி
3. பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது .......................
   அ) புல் ஆ) நெல் இ) உப்பு ஈ) மிளகு
4. ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு ..................
   அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் ஈ) அமராவதி
5. வீட்டு உபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம்
   அ) நீலகிரி ஆ) கரூர் இ) கோயம்புத்தூர் ஈ) திண்டுக்கல்

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

6. 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் ............................
7. சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் ......................
8. சேரர்களின் நாடு ...................... எனப்பட்டது.
9. பின்னலாடை நகரமாக ..................... விளங்குகிறது.

**குறுவினா**

10. மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.
11. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
12. 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?

**சிறுவினா**

13. கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?
14. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.

**நெடுவினா**

15. கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

## காலம் உடன் வரும்

1. 'காலம் உடன் வரும்' – கதையைச் சுருக்கி எழுதுக.

## புணர்ச்சி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. விகாரப் புணர்ச்சி ................ வகைப்படும்.
   அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு
2. 'பாலாடை' – இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ........................
   அ) இயல்பு ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

**பொருத்துக**

3. மட்பாண்டம் – அ) தோன்றல் விகாரம்
4. மரவேர் – ஆ) இயல்புப் புணர்ச்சி
5. மணிமுடி – இ) கெடுதல் விகாரம்
6. கடைத்தெரு – ஈ) திரிதல் விகாரம்

**சிறுவினா**

7. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
8. மரக்கட்டில் – இச்சொல்லைப் பிரித்து எழுதிப் புணர்ச்சியை விளக்குக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**பின்வரும் மரபுத்தொடர்களைப் பொருளோடு பொருத்துக.**

9. ஆயிரங்காலத்துப் பயிர் – அ) இயலாத செயல்
10. கல்லில் நார் உரித்தல் – ஆ) ஆராய்ந்து பாராமல்
11. கம்பி நீட்டுதல் – இ) இருப்பதுபோல் தோன்றும் ஆனால் இருக்காது
12. கானல்நீர் – ஈ) நீண்டகாலமாக இருப்பது
13. கண்ணை மூடிக்கொண்டு – உ) விரைந்து வெளியேறுதல்

**பின்வரும் மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

14. வாழையடி வாழையாக
15. முதலைக்கண்ணீர்
16. எடுப்பார் கைப்பிள்ளை

**கட்டுரை எழுதுக.**

17. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
(முன்னுரை-கைத்தொழிலின் அவசியம்-கைத்தொழில் வகைகள்-கைத்தொழிலின் பயன்கள்-கைத்தொழிலால் தோன்றிய கல்வி-முடிவுரை)

**கலைச்சொல் அறிவோம்**

18. Thread
19. Loom
20. Dairy farm
21. Tanning
22. Stitch
23. Factory
24. Dying
25. Ready made

## படை வேழம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. சிங்கம் ......................... யில் வாழும்.
அ) மாயை ஆ) ஊழி இ) முழை ஈ) அலை
2. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு .........................
அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி
3. 'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........................
அ) வெம் + கரி ஆ) வெம்மை + கரி இ) வெண் + கரி ஈ) வெங் + கரி
4. 'என்றிருள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .......................
அ) என் + இருள் ஆ) எட்டு + இருள் இ) என்ற + இருள் ஈ) என்று + இருள்
5. 'போல் + உடன்றன' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .....................
அ) போன்றனஆ) போலன்றன இ) போலுடன்றன ஈ) போல்உடன்றன

**குறுவினா**

6. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர்?
7. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?
8. சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை?

**சிறுவினா**

9. சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப் படைவீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?

## விடுதலைத் திருநாள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வானில் முழுநிலவு அழகாகத் ................. அளித்தது.
அ) தயவு ஆ) தரிசனம் இ) துணிவு ஈ) தயக்கம்
2. இந்த ................ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.
அ) வையம் ஆ) வானம் இ) ஆழி ஈ) கானகம்
3. 'சீவனில்லாமல் ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............
அ) சீவ + நில்லாமல் ஆ) சீவன் + நில்லாமல் இ) சீவன் + இல்லாமல் ஈ) சீவ + இல்லாமல்
4. 'விலங்கொடித்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............
அ) விலம் + கொடித்து ஆ) விலம் + ஒடித்து இ) விலன் + ஒடித்து ஈ) விலங்கு + ஒடித்து
5. காட்டை + எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............
அ) காட்டை எரித்து ஆ) காட்டையெரித்து இ) காடுஎரித்து ஈ) காடுயெரித்து
6. இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...............
அ) இதந்தரும் ஆ) இதம்தரும் இ) இதத்தரும் ஈ) இதைத்தரும்

**குறுவினா**

7. பகத்சிங் கண்ட கனவு யாது?
8. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?

**சிறுவினா**

9. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

**பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன்.**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எம்.ஜி.ஆர் .................... என்னும் ஊரில் கல்வி பயின்றார்.
   அ) கண்டி ஆ) கும்பகோணம் இ) சென்னை ஈ) மதுரை
2. எம்.ஜி.ஆர். படிப்பைத் தொடர முடியாமைக்குக் காரணம் .............
   அ) நடிப்பு ஆர்வம் ஆ) பள்ளி இல்லாமை இ) குடும்ப வறுமை ஈ) படிப்பில் ஆர்வமில்லாமை
3. இந்திய அரசு சிறந்த நடிகருக்கான ............ எனும் பட்டத்தை எம்.ஜி. டக்கு வழங்கியது.
   அ) புரட்சித் தலைவர் ஆ) பாரத் இ) பாரத மாமணி ஈ) புரட்சி நடிகர்
4. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் ...........
   அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை
5. எம்.ஜி.ஆருக்கு அழியாத புகழைத் தேடித் தந்த திட்டம் .............
   அ) மதிய உணவுத் திட்டம் ஆ) வீட்டு வசதித் திட்டம் இ) மகளிர் நலன் திட்டம் ஈ) இலவசக் காலணித் திட்டம்

**குறுவினா**

6. எம்.ஜி.ஆர். நாடகத்துறையில் ஈடுபடக் காரணம் என்ன?
7. திரைத்துறையில் எம்.ஜி.ஆரின் பன்முகத் திறமைகள் யாவை?
8. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.

**சிறுவினா**

9. பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வை எழுதுக.
10. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர். ஆற்றிய பணிகள் யாவை?

**நெடுவினா**

11. எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக.

**அறிவுசால் ஔவையார்**

1. அறிவுசால் ஔவையார் – என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

**வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்**

**பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும், மிகா இடங்கள் என வகைப்படுத்துக.**

1. சுட்டுத் திரிபு –
2. திசைப் பெயர்கள் –
3. பெயரெச்சம் –
4. உவமைத் தொகை –
5. நான்காம் வேற்றுமை விரி –
6. இரண்டாம் வேற்றுமை தொகை –
7. வினைத்தொகை –
8. உருவகம் –
9. எழுவாய்த் தொடர் –
10. எதிர்மறைப் பெயரெச்சம் –

**சிறுவினா**

11. சந்திப்பிழை என்றால் என்ன?
12. வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களை எழுதுக.
13. வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தனை எழுதுக.

**பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

14. அதைச் செய்தது நான் அன்று.
15. பானையை உடைத்தது கண்ணன் அல்ல.
16. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை.
17. சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லோம்.
18. பகைவர் நீவீர் அல்லர்.

**சரியான எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக.**

19. தாங்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை ……………
20. உங்களோடு வருவோர் …………… அல்லோம்.
21. மணிமேகலை செல்வ வாழ்வை விரும்பியவள் ……………
22. மொய்த்த பண்டங்கள் உடலுக்கு நன்மை செய்வன ……………
23. இந்த நிலத்துக்கு உரிமையாளர் ………… அல்லை.

**கட்டுரை எழுதுக.**

24. நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு
(முன்னுரை-மாற்றங்களின் விதை-தொண்டு-இளைஞர்களின் பங்கு-பிற பணிகள்-முடிவுரை)

**கலைச்சொல் அறிவோம்**

25. Equestrian
26. The Hero
27. Chief Minister
28. Leadership
30. Support
31. Tax
32. Victory
33. Member of Legislative
34. Assembly

ந.தாண்டவமூர்த்தி MA.,B.Ed

www.Padasalai.Net